[1982 ஏப்ரல் 1

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டைப்பற்றிச் சொல்கிறார்கள். நாளுக்கு நாள் பேருந்துகளிலே செல்கிற மக்கள் தொகை அதிகமாகிக்கொண்டிருக்கின்ற காரணத்தினால் பாயின்ட்டு பாயின்ட் சர்வீஸ் விடுவது அவசியமாக இருக்கிறது. தற்போது எக்ஸ்பிரஸ் சர்வீஸ் விடப்பட்டு அதிலே சாதாரண கட்டணத்தைவிட $1\frac{1}{2}$ மடங்கு வசூலிக்கிறார்கள். சூப்பர் எக்ஸ்பிரஸ் பேருந்துகளில் இரண்டு மடங்கு கட்டணம் வசூலிக்கிறார்கள். அவைகள் எல்லாம் பல தடங்களிலே ஆள் இல்லாத நிலைமையிலே நட்டத்திலே ஓடிக்கொண்டு இருக்கின்றன என்பது அமைச்சருக்குத் தெரியுமா ? அதையெல்லாம் தவிர்த்து எல்லா வழித்தடங்களிலும் பாயின்ட் டு பாயின்ட் சர்வீஸ் விடப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டிலேயிலிருந்து ஜனத்தொகை வளர்ந்திருக்கிறது. பேருந்துகளின் எண்ணிக்கையும் வளர்ந்திருக்கிறது என்பதை மறுக்கமாட்டார்கள். ஏற்கெனவே பாயின்ட் டு பாயின்ட் சர்வீஸ் விடுவதுபற்றிச் சொன்னேன். எந்த எந்த வழித்தடங்களில் மக்களுக்கு அதிகமாகப் பயன்படுகின்ற நிலைமை இருக்கிறது, செல்வாக்கு எந்த இடத்திலே இருக்கிறது என்பதைத் தெரிந்து சில வழித்தடங்களிலே செய்திருக்கிறோம். இன்றைய தினம் 2 வழித்தடங்களிலே விட்டுக்கொண்டிருக்கிறோம்.

திருவண்ணாமலை வட்டத்தில் பேருந்துகள் விடும் திட்டம்.

*வினா எண் 716—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை வட்டம், திருவண்ணாமலை—மதுராம்பட்டு, கல்லேரி—தண்டராம்பட்டு, திருவண்ணாமலை—கண்டியாங்குப்பம் ஆகிய வழித்தடங்களில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பேருந்துகள் விடக்கோரி அப்பகுதி கிராம மக்களிடமிருந்து வந்துள்ள விண்ணப்பத்தின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : திருவண்ணாமலை—மதுராம்பட்டு வழித்தடத்தில் பேருந்து விடுவதற்கான செயற்குறிப்பு தற்பொழுது தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் ஆய்வில் இருக்கின்றது. கல்லேரி—தண்டராம்பட்டு மற்றும் திருவண்ணாமலை—கண்டியாங்குப்பம் ஆகிய வழித்தடங்களில் பேருந்து விடும்படி கேட்டு விண்ணப்பங்கள் எதுவும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக அலுவலகத்திற்கு வரவில்லை.

1982 ஏப்ரல் 1]

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பஸ் விட ஆய்வுகள் செய்யப்படுகின்றன என்று கூறினார்கள். அந்த ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டனவா? அந்தப் பணி எப்பொழுது முடிக்கப்படும் ? அந்தப் பகுதியில் அந்தப் போக்கு வரத்து பஸ் வசதி எப்பொழுது செய்து தரப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் ஆய்விலே இருப்பதாகச் சொன்னேன். விரைவாக முடித்து விடுவார்கள் என நம்புகிறேன். அந்த ஆய்வுப் பணி முடிந்த பின்பு தேவை என்றால் பேருந்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராம்பட்டு, நாரையூர், ஆலநந்தல், அந்தம் பள்ளி போன்ற பகுதிகள் எல்லாம் தென் ஆற்காடு மாவட்டத்தை ஒட்டி இருப்பதால் திருவண்ணாமலைக்கும் மதுராம் பட்டுக்கும் கிட்டத்தட்ட 25 மைல் தூரம் இருப்பதால், தனியார் போக்குவரத்து வசதியும் கிடையாது, அரசாங்க பஸ் போக்குவரத்து வசதியும் கிடையாது என்ற நிலையில், தனியார் பஸ்களையோ, அரசாங்க பஸ்களையோ உடனடியாக விடுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பேருந்து வசதி கொடுக்கப்பட வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கம். எனவே, அந்த அடிப்படையிலே அங்கே பேருந்துகள் இல்லாமல் இருக்குமானால் அதற்கான நடவடிக்கையை அரசாங்கம் துரிதமாக எடுக்கும்.

TRUTH ALONE TRIUMPHS

காது கேளாதவர் அனைவருக்கும் காது கேட்கும் கருவிகளை இலவசமாக வழங்கும் திட்டம்.

*வினா எண். 717— திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் காதுகேளாத அனைவருக்கும் காது கேட்கும் கருவிகள் இலவசமாக வழங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?